செ.வெ.எண்: 691 நாள்: 06.11.2024

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் இளைஞர் திறன் திருவிழா, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இளைஞர் திறன் திருவிழாவானது புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்/ மகளிர் திட்டம், சார்பாக 09.11.2024 சனிக்கிழமை அன்று அரசு பாலிடெக்னிக் கல்லூரி அறந்தாங்கியிலும், 16.11.2024 சனிக்கிழமை அன்று இராணியார் அரசு மேல்நிலை பள்ளியிலும் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை முகாம் நடைபெற உள்ளது.

இலவச இளைஞர் திறன் பயிற்சிக்காக ஆள் சேர்ப்பு முகாமான இளைஞர் திறன் திருவிழாவில் 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட 10ம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு, ஐ.டி.ஐ., டிப்ளமோ போன்ற அனைத்து படிப்பும் படித்த ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளலாம். மேலும், இளைஞர் திறன் திருவிழாவில் இலவச திறன் பயிற்சிக்கு இளைஞர்களை தேர்வு செய்வதற்கு தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜனா திட்டத்தின் (DDU-GKY) கீழ் 15 திறன் பயிற்சி நிறுவனங்களும் மற்றும் பிற திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களும் கலந்து கொண்டு பல்வேறு திறன் பயிற்சிக்காக இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரையிலான இலவச பயிற்சி வழங்கப்பட உள்ளனர். இலவச திறன் பயிற்சிக்கு பிறகு தனியார் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படவுள்ளது. மகளிர் திட்டம் சார்பாக நடைபெறவுள்ள இரண்டு இளைஞர் திறன் திருவிழாவிலும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai